# இமதுவ பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இமதுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

-------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான மாவெல்ல தகனசாலை காணியின் கருவா பயிர்செய்கை தொடர்பாக செயற்பாட்டு விளைவுகள் சாட்டுவதற்காக தனியாக கணக்கொண்டு சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சொத்துக்கள் பொறுப்புக்கள் பகிர்தளிக்கும் குழுவின் விதப்புரையின் பிரகாரம் ஹபராதுவ பிரதேச சபையினால் இமதுவ பிரதேச சபைக்கு சாட்டப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 9,794,393 இற்கான சொத்துக்கள் மற்றும் ரூபா 2,051,704 இற்கான பொறுப்புக்கள் அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஜூலை 07 திகதி வரை குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டரீதியாக பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 14,862,248 தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பகிரப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் என ரூபா 40,656 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அதற்காக ரூபா 45,000 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் கடன்கொடுத்தோர் மற்றும் செலவுகள் ரூபா 45,000 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன. மேலும் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போதும் மற்றும் மீளாய்வாண்டின் போதும் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 36,000 இற்கான நூலக ஊழியர்கள் பிணை வைப்பினை முதலீடு செய்திருக்கவில்லை.

(உ) ரதாகெத, கொஸ்துவகெத, ஹதுன்கெத, மில்லகஹகெத 7 ஏக்கர் 15 பர்சஸ் கொண்ட காணியை உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 2,280,000 தொகை மற்றும் சபை நிதியத்தில் இருந்து ரூபா 570,000 தொகை இமதுவ பிரதேசச் செயலகத்தில் வைப்பு செய்திருந்த போதிலும் அதனை பாதுகாப்பு பிணை ஒன்றாக காட்டப்படாது நிலையான சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 119,000 இற்கான முத்திரைக் கட்டண வருமானத்திற்காக நிதிக் கூற்றுக்களில் பில் போடப்படாமையால் முத்திரை கட்டண வருமானம் ரூபா 119,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) ரூபா 97,001 பெறுமதியான பொருட் பதிவேட்டுப் பொருட்கள் , இயந்திரங்கள் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் ரூபா 97,001 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 135,592 இற்கான மூலதன தன்மையுள்ள செலவுகள் நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஐ) 2014 மந்திரிமார் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 97,846 இற்கான நிர்மாண வேலை ஒன்றிற்காக மற்றும் 2014 மாகாண குறிப்பிட்ட மானியத்தின் கீழ் ரூபா 847,045 இற்கான 02 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள் என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் மற்றும் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 944,891 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) ரூபா 1,000,000 பெறுமதியான கஹந்த பாடசாலை மாவத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையைத் திருத்தி ரூபா 500,000 வீதம் 02 நிர்மாண வேலைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் மற்றும் கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 1,000,000 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது 17 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய உதவி நிதி ரூபா 7,645,255 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,450,000 தொகை என ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 2,804,745 வீதம் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது 14 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய உதவித் தொகை ரூபா 5,734,407 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,172,227 தொகை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 437,820 வீதம் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவுகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(க) ஹபராதுவ பிரதேச சபையின் மீளாய்வாண்டு தொடர்பாக பெறப்படும் நீதி மன்றத் தண்டப்பண வருமானம் பில்போடப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட சபையில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் நீதி மன்றத் தண்டப் பணம் என ரூபா 36,342 தொகை ஒன்று பெற வேண்டியிருந்த போதிலும் ரூபா 50,000 தொனை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 13,658 இனால்

மிகையாக பில்போடப்படல் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். எனினும், ரூபா 299,685 இற்கான குறைவாக பில் போடப்பட்டவை என காட்டப்பட்டிருந்தமையால் நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 313,343 இனால் மிகையாகக் காட்டப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 466,413 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 161,865,148 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், வரைபுகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, சமப்படுத்தப்பட்ட வைப்புப் பதிவேடு, பட்டோலைகள், நாளது வரை பேணப்பட்ட கடன் பதிவேடு, காலப்பகுப்பாய்வு, முறையாக பேணப்பட்ட கடன்கொடுத்தோர் கடன்பட்டோர் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், முறையாக பேணப்பட்ட முற்பண பதிவேடு, முறையாக பேணப்பட்ட ஊழியர் கடன்பதிவேடு மற்றும் கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் கடிதங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 3,111,523 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,211,494 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீத வரி

--------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 269,062 இற்கான வீத வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர் வரி

------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 47,380 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

----------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 442,566 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 4,250 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,502,957 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 அதிகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------------

வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

------------------------------------------------

பிரதேச சபை நிதியத்தினை பயன்படுத்துவது பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான மூன்று வெளிநாட்டு கல்விச் சுற்றுவுக்காக ரூபா 1,179,688 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. அவ் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக முறையான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 2014 ஆண்டிற்கான சபையின் தலைவர், தவிர ஏனைய 08 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------------

3.3.1 எசஸ அசிரிய நிகழ்ச்சித் திட்டம்

-------------------------------------------------------

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 400,272 தொகை ஒன்று செலவு மேற்கொள்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) இன் கீழ் 2014 நவம்பர் 19 திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்த்திற்கான மொத்தச் செலவு ரூபா 798,309 தொகை எனினும் ரூபா 400,272 இற்கான செலவுகளுக்கு மாத்திரம் உறுதிச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் ரூபா 398,037 இற்கான செலவுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

3.3.2 பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

---------------------------------------------------------------------------------------------------

2014 பாதீட்டு பிரேரணைகளின் பிரகாரம் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு ரூபா 7,000,000 தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜனவரி 21 வரை ரூபா 4,000,000 கிடைத்திருந்த போதிலும் 02 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இமதுவ கோதாகொட தாய்மார் பிணி ஆய்வு நிலையம், ஆயுள்வேத மற்றும் நூலக கட்டிடத்தின் உடைந்துள்ள பகுதிகளை திருத்துவதற்காக மற்றும் கூரையை அகற்றி கூரைத்தகடு பொருத்துதல், சிவிலின் பொருத்துதல், வர்ணம் பூசுதல் ஆகியவற்றிற்காக ரூபா 248,575 மற்றும் வாகனத்தை

திருத்துவதற்காக மற்றும் பராமரிப்புக்காக ரூபா 343,591 ஆக ரூபா 592,166 தொகையொன்று செலவு செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகையாகிய ரூபா 3,407,834 குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளில் மீதிகளாகக் காணப்படாமையால் குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படாமல் ஏனைய செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

3.3.3 நிகழ்பிரதி இயந்திரம் கொள்வனவு செய்தல்

---------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதி ரூபா 134,800 தொகையொன்று செலவிடப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து KYOCER வகையான நிகழ் பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 208 இன் பிரகாரம் ரூபா 50,000 இனை மிகைக்கும் கொள்வனவுகள் தொடர்பாக கேள்விதாரர்கள் வாசிப்பாளர்கள் என நினைக்கும் நாளாந்தச் செய்தித்தாள்களில் குறிப்பிட்ட கேள்வி அறிவித்தல் பிரசுரிக்கப்பட வேண்டும். எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) விதி 210 இன் பிரகாரம் அல்லது கேள்வி குழுவிடம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டு, கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த கொள்வனவுகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

--------------------------------------------------------

2013 ஜுன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், ரூபா 1,959,000 பெறுமதியான 03 வாகனங்கள் பாவணைக்கு எடுக்கும் விதமாக திருத்தப்பட்டு அல்லது ஜனாதிபதி செயலாளரின் அறிவுரை கடிதத்தின் பிரகாரம் அகற்றுவதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜனவரி 21 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து 2014 நவம்பர் மாதத்தில் 1" கல்வணய்ஸ் குழாய்கள் 600 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(i) சபைக்கு கிடைத்திருந்த 600 கல்வணய்ஸ் குழாய்கள் பொருட் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த குழாய்களில் 150 குழாய்கள் ஹபராதுவ பிரதேச சபைக்கு 2015 மார்ச் 31 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 ஏப்ரல் 02 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இமதுவ பிரதேச சபையிடம் காணப்பட்ட 303 குழாய்களும், 2015 ஏப்ரல் 06 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது ஹபராதுவ பிரதேச சபையில் 150 உம் காணப்பட்டன என உறுதிப்படுத்தப்பட்டது.

(iii) இதன் பிரகாரம் கிடைத்திருந்த 1" கல்வணய்ஸ் குழாய்கள் 600 இல் 147குழாய்களுக்கான பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டது. இதன் பிரகாரம் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 162,729 ஆகும்.

3.6 தகனசாலை நிர்மாணித்தல்

-------------------------------------------

பிரதேச சபையின் தகனசாலை நிர்மாணிக்கும் விடயத்திற்காக 2007 ஆகஸ்ட் 08 தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2008 பெப்ரவரி 09 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜனவரி 21 திகதி வரை தகனசாலையின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்காக ரூபா 10,155,015 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

2007 ஆண்டின் போது விஷேட செயற்திட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் கணக்காய்வுத் திகதி வரை 06 வருடங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இச் செயற்திட்டத்தினால் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களுக்க வழங்கவிருந்த சேவையை பெற்றுக்கொடுத்தல் சபைக்கு இயலாதுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்கள் இடையே முரண்கள் காணப்பட்டன எனவும் இச் செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டதெனவும் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்